**O.S. 31/2018, 22.02.2021, 12.10 pm - 01.20 pm**

**வா.சா.1, கோவிந்தராஜ், த/பெ.அப்பையா**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் தாக்கல் செய்த வழக்கிற்கு பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. இந்த வழக்கின் சொத்து குறித்து ஏற்கனவே எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட வழக்கு எண்.69/2011 முடிந்துவிட்டது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் சொத்து எனக்கு பாத்தியம் மற்றும் பிரதிவாதி அதில் தொந்தரவு செய்யகூடாது என்று தாக்கல் செய்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கு 26.10.2015 அன்று எனக்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு எண்.26/2016 வாணியம்பாடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 08.06.2017 தேதியிட்ட மேல்முறையீடு பகுதியாக தீர்ப்பானது என்றால் சரியல்ல, அது எனக்கு சாதகமாக தீர்ப்பானது. அந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் எனக்கு சாதகமாகவும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிரதிவாதிக்கு சாதகமாகவும் தீர்ப்பானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மேல்முறையீட்டு தீர்ப்பு நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், கீழமை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த வழக்கு எனக்கு விரோதமாக தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த தீர்ப்பை எதிர்த்து தான் மேல்முறையீடு செய்த வழக்கில் பகுதியாகதான் எனக்கு தீர்ப்பாகியுள்ளது என்றும், நான் கூறுவதுபோல் முழுமையாக இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4ஆன தீர்ப்பில் சுவாதீனம் என்னிடத்தில் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சார்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து இரண்டாம் மேல்முறையீடு செய்ய சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் செய்யவில்லை, எதிர்தரப்பினர்தான் செய்தார்கள். எதிர்தரப்பினர் தாக்கல் செய்ததாக குறிப்பிடும் மனு எதாவது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய முதல் பிரமாண வாக்குமூலம் மற்றும் வழக்குரையில் அ.வ.எண்.69/201 தாக்கல் செய்த ஒரு ஆண்டு காலத்திற்கு பிரதிவாதிகள் அனுபவத்தில் வந்துவிட்டார்கள் என்று கூறியுள்ளீர்கள் என்றால் இல்லை. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் உள்ளதால் காலி செய்து கொடுக்க சொல்லி தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் எப்பொழுதிலிருந்து வழக்கு சொத்தில் இருக்கிறார்கள் என்றால் சுமார் 10 அல்லது 12 ஆண்டுகளாக இருக்கிறார்கள். நான் தாக்கல் செய்த முதல் வழக்கிலிருந்து சுவாதீனத்தில் இருக்கிறார்களா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த முதல் வழக்கு தள்ளுபடியான சமயத்தில் யார் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றால் பிரதிவாதிகள் இருந்தார்கள். நான் வழக்கு தாக்கல் செய்த எவ்வளவு நாட்களில் பிரதிவாதிகள் சுவாதீனத்தில் வந்துவிட்டார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்த 6 மாதம் கழித்து சுவாதீனத்தில் வந்துவிட்டார்கள். அதன் பின்னிட்டு அந்த வழக்கின் சாட்சியை விசாரித்தபொழுது

அந்த விசாரணையின் பொழுது நான் தான் சுவாதீனத்தில் இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் ஒரு மெத்தை வீடும், ஒரு ஓடு வீடு உள்ளது என்றால் சரிதான். மெத்தை வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. ஓடு வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை, 9-ல் மின் இணைப்பு இல்லை, 10ல் உள்ளது. மெத்தை வீட்டிற்கும், ஓடு வீட்டிற்கும் வீட்டு வரி ரசீது உள்ளதா என்றால் உள்ளது. யார் பெயரில் உள்ளது என்றால் 9-ன் வீட்டு வரி ரசீது என் பெயரில் உள்ளது, 10 கோவிந்தன் பெயரில் உள்ளது. பக்கத்திலுள்ள 8 யார் பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 8 சொத்தில் கட்டிடம் உள்ளதா என்றால் 8 பற்றி எனக்கு தெரியாது. 11 யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. மெத்தை வீடு மற்றும் ஓடு வீடு எந்த எண்ணில் உள்ளது என்றால் 9ல் உள்ளது. மின் இணைப்பு இல்லை, ஆனால், 10-லிருந்து மின் இணைப்பு எடுத்து மெத்தை வீட்டில் மட்டும் மின் இணைப்பு உள்ளது. 10 யார் பெயரில் உள்ளத என்றால் 1ம் பிரதிவாதி கோவிந்தன் பெயரில் உள்ளது. அசல் வழக்கு எண்.69/2011 என்ற வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே டி.பூபதி என்ற வழக்கறிஞர் மூலம் 1ம்

பிரதிவாதிக்கும், BDO-க்கு அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. என்னிடம் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தில் வாடகைக்கு இருப்பதாகவும், அதனுடைய வாடகை பாக்கி செலுத்த வேண்டும் என்று 30.09.1997 தேதியில் ஒரு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் இல்லை. வாடகைக்கு இருக்கும் 1ம் பிரதிவாதி அனுமதியில்லாமல் மின் இணைப்பு பெற்றுவிட்டதாக அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 10ல் இருக்கும் மின் இணைப்பை பற்றி குறிப்பிட்டிருப்பார்கள். நான் என்னுடைய முதல் விசாரணையில் பிரதிவாதி தாக்கல் செய்த சங்கதிகளான மேற்படி அறிவிப்பை பற்றி மறுத்து குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாவில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் சிவப்பு நிறம் மற்றும் பச்சை நிறம் என்ன என்றால் சிவப்பு நிறம் ஓடு வீடு, பச்சை நிறம் மெத்தை வீடு. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மேற்படி சொத்தில் எந்த இடத்தில் உள்ளார்கள் என்றால் வடக்கே 1ம் பிரதிவாதியும், தெற்கே 2ம் பிரதிவாதியும் உள்ளார்கள். 2ம் பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்கே காலியிடம் உள்ளதா என்றால் இல்லை அது சாமண்ண கவுண்டர் வகையறா உடையது. தாவா சொத்திற்கு வடக்கே மகேஷ்வரி சொத்து என்றால் சரிதான். தற்பொழுது அவர்கள் அங்குதான் உள்ளார். மகேஷ்வரி என் தரப்பு சாட்சியாக விசாரணை செய்யபோகிறேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் குறிப்பாக எந்த தேதியில் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் நான் படிக்காததால் குறிப்பிட்டு என்னால் தேதி சொல்ல முடியவில்லை. 1995ஆம் வருடத்தில் தான் நத்தம் பட்டா கொடுத்தார்கள் என்றால் சரிதான். வீட்டு பகுதிக்கு தான் பட்டா கொடுத்தார்கள், காலி இடத்திற்கு பட்டா கொடுக்காமல் நத்தம் புறம்போக்கு என்று வைத்துவிட்டார்கள் என்று சொன்னால் இல்லை, எனக்கு வீடு இருந்ததால் பட்டா கொடுத்தார்கள். 1995-லேயே என் பெயரில் வீடு இருந்ததாக கூறுகிறேனா என்றால் ஆமாம். 1995-லிருந்து 2011 வரை ஏதேனும் வீட்டுவரி ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் பழைய வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது தவறு என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றும், வரி ரசீது தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கூறும் மெத்தை வீடு மற்றும் ஓடு வீட்டிற்கு என் பெயரில் ரசீது உள்ளதா என்றால் தற்பொழுது நான் கொடுக்கவில்லை. மெத்தை வீட்டிற்கும், ஓடு வீட்டிற்கும் ரசீது தற்பொழுது யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது, எனக்கும், புருஷோத்தம் திம்மாம்பேட்டை கிராம கிளார்க்கும் விரோதம் உள்ளது. அந்த விரோதத்தை பற்றி நான் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கிராம நிர்வாக அலுவலரிடம் நேரடியாக சென்று கூறினேன். 9-ல் என்னுடைய சுவாதீனம் உள்ளதா என்றால் உள்ளது. வடக்கு தெற்கு 42, கிழக்கு மேற்கு 26 அதில் 20 முதல் 25 சதுரடியில் சுவாதீனத்தில் இருக்கிறேன். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் எவ்வளவு நாட்களாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் ரொம்ப காலமாக இல்லை, நான் தேர்தலில் நின்ற காலத்திலிருந்து பேச்சுவார்த்தை இல்லை. தேர்தல் என்பது திம்மாம்பேட்டை ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு நான் நின்ற காலத்திலிருந்து பேச்சுவார்த்தை இல்லை. நான் முதல்முறை துணைத்தலைவராக இருந்தேன். நான் துணைத்தலைவராக இருந்த காலத்தில் யார் பஞ்சாயத்து கிளார்க் என்றால் மேற்படி புருஷோத்தமன் தான், நாங்கள் போட்டவர் தான். அதன்பிறகு தலைவர் பதவிக்கு எத்தனை முறை போட்டியிட்டேன் என்றால் இரண்டு முறை போட்டியிட்டேன். இரண்டு முறையும் 60 மற்றும் 150 வாக்குகளில் வித்தியாசத்தில் வெற்றி பெற முடியாமல் போய்விட்டது. அந்த இரண்டு முறையும் பிரதிவாதிகள் எனக்கு விரோதமாகதான் பணி செய்தார்கள் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதியின் சகோதரரின் மனைவி தான் ஒருமுறை என்னிடம் ஜெயித்தார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் சகோதரர் சம்பத் ஊர் கவுண்டராக இருந்தாரா என்றால் ஆமாம், தற்பொழுது இல்லை. எனக்கும் சொத்துக்கும் சம்மந்தமில்லை என்றும், தேர்தலின் காரணமாக போலி பட்டாவை வைத்து கொண்டு வழக்கை தாக்கல் செய்து பிரதிவாதிகளை தொல்லைபடுத்துவதாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல, நான் வைத்திருக்கும்பட்டா உண்மை பட்டா, பிரதிவாதிகள் போலியாக வைத்துள்ளார்கள். 10 எண் பட்டா 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது. 10 நெம்பர் இடத்தில் வீடு உள்ளதா என்றால் 10 நெம்பர் இடத்தில் வீடு இல்லை, 9 அல்லது 10 என்பது சரியாக தெரியவில்லை. 9, 10 சொத்துக்களை சர்வேயர் வைத்து அளந்து பார்த்தீர்களா என்றால் சுமார் 4 வருடத்திற்கு முன்பு அளந்து பார்த்திருக்கிறேன். சொத்தை அளந்ததாக கூறும் சமயத்தில் கட்டுமானம் இருந்ததா என்றால் இருந்தது. நான் பணம் எதுவும் கட்டவில்லை, சாமண்ண கவுண்டர் பேரன் முர்த்தி அவருடைய சொத்தை அளந்தபொழுது என்னுடைய சொத்தையும் அளக்க சொல்லி கேட்டுக்கொண்டேன். அவ்வாறு அளக்கும்பொழுது பிரதிவாதிகள் ஒத்துழைத்தார்களா என்றால் இல்லை. என்னுடைய சொத்தை அடையாளம் காண்பதில் பிரச்சனை உள்ளது என்றும், அதை தெளிவுபடுத்தாமல் வழக்கு தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மெத்தை வீடும், ஓடு வீடும் 1995லிருந்தே இருக்கிறது என்றால் சரிதான். ஏற்கனவே வீடு இருக்கும் சமயத்தில் ஏன் கலைஞர் வீடு கட்டும் திட்டத்தில் வீடு கட்டக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால் ஓடு வீடு மட்டும் தான்

இருந்தது, மெத்தை கட்டுவதற்கு ஆட்சேபித்தேன். ஏற்கனவே மெத்தை வீடு கட்டிவிட்டார்கள் என்று நான் கூறியதன் அடிப்படையில் நான் தற்பொழுது ஆட்சேபனை கொடுத்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. 30.09.1997ல் நான் 1ம் பிரதிவாதிக்கு பூபதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு இதுதானா என்று கேட்டதற்கு எனக்கு படிக்க தெரியாது என்று சாட்சியமளித்தார். எனக்கு நன்றாக படிக்க தெரியும் என்றும், வழக்கிற்காக சங்கதிகளை தெரிந்தே தற்பொழுது படிக்காதவன் என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 09.05.2011ல் மீண்டும் பூபதி வழக்கறிஞர் மூலம் வருவாய்துறையினருக்கும், பிரதிவாதிக்கும், அப்போதைய ஊராட்சி மன்ற தலைவருக்கும் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. 20.5.2011ல் பிரதிவாதிகள் அதற்கு முறையான பதில் அறிவிப்பு அனுப்பி, அதனுடைய நகலை எனக்கும் அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. 14.12.2017ல் இப்போதைய வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரியல்ல. அதனுடைய சார்வான நகலை சாட்சியிடம் காண்பித்தபொழுது எனக்கு படிக்க தெரியாது என்று சாட்சியமளித்தார். எனக்கு அனைத்து சங்கதிகளும் தெரியும், தற்பொழுது படிக்க தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஊராட்சி மன்ற துணைத்தலைவராக இருந்ததால் எனக்கு அனைத்து சங்கதிகளும் தெரியும் என்றும், தற்பொழுது வழக்கிற்காக படிக்க தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தவிர மற்ற குற்றவியல் வழக்குகளிலும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், எனக்கு ஆகாத குடும்பத்திற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு குற்றவியல் வழக்கு உள்ளது என்றால், அந்த வழக்கு வேறு, இந்த வழக்கு வேறு. அந்த வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன். நான் சாட்சியத்தை முன்னுக்குப்பின் முரணாக நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு நீதிமன்ற நடவடிக்கை அனைத்தும் தெரியும் என்றும், ஏற்கனவே முடிக்கப்பட்ட வழக்கின் மேல்முறையீடு செய்யாமல் மீண்டும் வேறொரு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் எனக்கு சாதகமாக அமைந்ததால் நான் பிரதிவாதிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, வழக்கு நிலுவையில் உள்ளது. ஏற்கனவே வழக்கு தீர்ப்பான பிறகு மீண்டும் அதே தரப்பினர்களிடையே வழக்கு தாக்கல் செய்துள்ளது முன்தீர்ப்பு தடையின் கீழ் பாதிக்கப்பட்டது, எனவே, வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தும் மற்றும் பக்கத்திலுள்ள சொத்து பிரதிவாதிகள் பத்திரம் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 10-ல் வீடு கட்டுவதற்கு பதில் 9-ல் சேர்ந்து ஆக்கிரமித்து வீடு கட்டியதாக ஒரு இடத்திலும், மற்றொரு இடத்தில் தாவா சொத்தில் என்னுடைய சொத்து என்று தெரிந்தே வீடு கட்டிவிட்டார்கள் என்று மாற்றி மாற்றி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, ஒரு பகுதியில் மட்டும்தான் வீடு கட்டியுள்ளார்கள். வடக்கே மகேஷ்வரி சொத்து அவருக்கு முன்பு வஜ்ஜிரம் என்பவரின் சொத்து என்பது தெரியுமா என்றால் தெரியும். 30.10.2008ல் மகேஷ்வரிக்கு பத்திரம் செய்ததில் செக்குபந்தியில் 1ம் பிரதிவாதி காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்குதெரியாது. வாணியம்பாடி

கூட்டுறவு வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 1ம் பிரதிவாதி கடன் பெற்று வீடு கட்டினார்கள் என்று சொன்னால் தவறு, புறம்போக்கு இடத்தில் கூட கடன் பெற்று வீடு கட்டுவார்கள். 1ம் பிரதிவாதி கடன் பெற்றதை நான் சரிபார்த்தேனா என்றால் நான் எதற்கு பார்க்க வேண்டும். அசல் வழக்கு எண்.69/2011ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் அவவாறு வீடு கட்டியதை பற்றியும், மின் இணைப்பு குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்பொழுது நான் வழக்கு தாக்கல் செய்த பிறகு கட்டியதாக கூறுகிறேன் என்று சொன்னால் தவறு. என்னை முதலில் விசாரித்தபொழுது, நான் கட்டுமான பணி செய்யக்கூடாது என்று புகார் கொடுத்தேன், அவ்வாறு இருந்தும் கட்டிடம் கட்டிவிட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. அசல வழக்கு எண்.69/2011-ன் வாக்குமூலத்தை பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்த மேற்படி சங்கதிகள் குறித்து அந்த வாக்குமூலத்தை குறியீடு செய்யுமாறு கூறினார். வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேலும், நீதிமன்றத்திற்கு இது சம்மந்தமான தெளிவு தேவைப்படுவதால் அதற்குண்டான முன்தீர்ப்பு ஏதேனும் சமர்பிக்கும்பட்சத்தில் அந்த ஆவணம் குறியீடு செய்யப்படும். அவ்வாறு தெளிவுபடுத்தும்வரை குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.